# தோஷம் நீங்க, சந்தோஷம் ஓங்க !!!

## ---வினவுங்கள் விடைதருவோம்

By London Swaminathan

Post No 790 dated 16th January 2014.

Hi Sir,

I read your article on Vishnu Sahasranamam (http://tamilandvedas.wordpress.com/2012/07/13/secrets-of-vishnu-sahasranama/).

I am wondering if VS can be used to reduce ill effects of XYZ dosha - as I have this. Life has been pretty bad last two years. I suffered very bad financial loss and peace of mind. Kindly advise me. Thanks.

XYZ

## Answer: “Yes, Vishnu Sahasranama can reduce ill effects of any Dosha”.

ஒரு அன்பர் விஷ்ணு சஹஸ்ரநாமம் பற்றிய எனது கட்டுரையைப் படித்துவிட்டு ஒரு ………… வகை தோஷம் நீங்க அது,உதவுமா? என்று கேட்டு ஈ மெயில் அனுப்பியுள்ளார். இந்த மாதிரி சந்தேஹங்கள் பலருக்கும் தோன்றுவது இயல்பே. ஆகையால் பொதுப்படையாக பதில் சொல்லத் துணிந்தேன்.

**“தெய்வம் நமக்குத் துணை பாப்பா–ஒரு**

**தீங்கு வரமாட்டாது பாப்பா”**

என்று சிறு வயதிலேயே கற்றுக் கொடுக்கச் சொன்னார் பாரதி. இதற்குப் பிறகும் இதே கருத்தை இரண்டாவது முறை அழுத்திச் சொல்கிறார்.

**“துன்பம் நெருங்கிவந்தபோதும் - நாம்**

**சோர்ந்து விடலகாது பாப்பா!**

**அன்பு மிகுந்த தெய்வம் உண்டு - துன்பம்**

**அத்தனையும் போக்கி விடும் பாப்பா!”**

இதே வார்த்தைகளை நான் சொல்லியிருந்தால் நீங்கள் நம்பி இருக்கமாட்டீர்கள். அல்லும் பகலும் அனவரதமும் , மந்திரம் போல் சொல்லின்பம் வேண்டும் என்று வேண்டிய பாரதியின் சொல்லுக்கு அபார மந்திர சக்தி உண்டு. அவர் சொல்லுவதை நம்புங்கள். தோஷங்கள் நீங்கி சந்தோஷங்கள் பெருகும்!

தெய்வம் கொடுக்கும் சோதனைகள் எல்லாம் நமக்கு அவள் கற்றுக் கொடுக்கும் பாடங்கள் என்பதும் அவன் கருத்து:

**“ஓம் சக்தி அருளால் உலகில் ஏறு–ஒரு**

**சங்கடம் வந்தால் இரண்டு கூறு;**

**சக்தி சில சோதனைகள் செய்தால் - அவள்**

**தன் அருளே என்று மனது தேறு”.**

-----என்கிறான் பாரதி.

பாரதிக்கு 1300 ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீவில்லிப்புத்தூர் என்னும் கிராமத்தில் ஒரு teenage girl ‘டீன் ஏஜ் கேர்ல்’ இருந்தாள். கல்லூரி மாணவி வயதுதான் அவளுக்கு. ஆண்டாள் என்று பெயர்.

தாமோதரனைப் பாடினால் கடந்த காலம், நிகழ் காலம் ,எதிர் காலம் எல்லாவற்றிலும் செய்யும் பாவங்கள் எல்லாம் தீயில் எரிந்து சாம்பல் ஆகிவிடும் என்கிறாள்:

**“தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை**

**தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது**

**வாயினால் பாடி, மனதினால் சிந்திக்க**

**போய பிழையும் புகுதருவான் நின்றனவும்**

**தீயினில் தூசாகும் செப்பு ஏல் ஓர் எம்பாவாய்**".

----- (திருப்பாவை பாடல் 5) என்று பாடுகிறாள்.

"Worship him, Damodara the Lure

With song in lips, mind engrossed

The sins committed deliberate or inadvertent

In the past, present and future entire

Shall be burnt a refuse in bonfire

Prithee, listen and consider, our damsel".

ஒரு வேளை மனித உருவில் வந்த ஆண்டாளையும் பாரதியையும் நம்ப நமது மனம் மறுத்தால், கிருஷ்ணன், பகவத் கீதையில் சொன்னதையாவது நம்பவேண்டும்:

'**ந ஹி கல்யாண க்ருத் கச்சித் துர்க்கதிம் தாத கச்சதி**' (கீதை 6–40)

தாத=மகனே!

ஹி= நிச்சயமாக

கல்யாண க்ருத்= நல்லதைச் செய்பவன்

கச்சித்= எவனும்

துர்க்கதிம்= கஷ்டத்தை/ தீய நிலையை

ந கச்சதி= அடையவே மாட்டான்

என்று அடித்துச் சொல்கிறான் கண்ண பிரான்.

O, Arjuna! Neither in this world nor in the next world is there destruction for him; none, verily, who does good, O My Son, ever comes to grief! (Bhagavad Gita 6-40)

விஷ்ணு சஹஸ்ர நாமத்திலும் இதே கருத்து இருப்பது, மஹாபாரத காலத்தில் இருந்து இந்த நம்பிக்கை உண்மையாகி வருவதைக் காட்டுகிறது:

**"சங்கீர்த்ய நாராயண சப்த மாத்ரம்**

**விமுக்த துக்கா சுகினோ பவந்து"**

நாராயண என்ற சப்தம் கேட்ட மாத்திரத்திலேயே துக்கம் எல்லாம் பறந்தோடிப் போய்விடும்–என்கிறது சஹஸ்ரநாமம்.

Chant the names of Narayana. They will overcome all adversity and attain peace and happiness.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் ----என்று பாடத்துவங்கிய அப்பர் பெருமான் **இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை** என்கிறார். மஹேந்திர பல்லவ மன்னன் எவ்வளவோ துன்பங்களை ஏவியபோதும் வெற்றி கண்ட பின்னர் அனுபவத்தில் உதிர்த்த முத்துக்கள் இவை.!

"நம்பினார் கெடுவதில்லை, இது நான்கு மறை தீர்ப்பு"-- என்பான பாரதி.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்"-- என்பது தமிழ் சான்றோர் வாக்கு.

தோஷம் நீங்குக ! சந்தோஷம் பெருகுக !!